# சங்க அகப்பாடல்களில் குறிகளில் தோழியின் செயல்பாடுகள்

***ஆய்வாளர் இரா. விஜயா***
உதவிப் பேராசிரியர்
தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958649

**ஆய்வுச்சுருக்கம்**

*இன்று செவ்வியல் இலக்கியமாக செம்மொழி இலக்கியமாக போற்றப்பெரும் சங்ககால இலக்கியங்கள் ஈராயிரத்துக்கு முந்தைய மக்களின் வாழ்வியல் வரலாற்றை இம்பும் வரலாற்று ஆவணங்களாக கருதப்பட்டுவருகிறது. இவற்றில் எட்டுத்தொகை அகநூல்களில் ஒன்றான அகநானூறு பண்டைய தமிழரின் காதல், வரலாற்று பதிவுகள், பண்பாட்டு கூறுகளை எடுத்து இயம்பும் நூலாகும். அவ்வாறான் அகநூழ்களில் பெருஞ்செல்வாக்கு கொண்டவர்கள் மகளிர்தாம். அக மாந்தர்களின் தலைவனும், தலைவியும் காதலுணர்வு வயப்பட்டுத் தடுமாறும் தன்மையர் செவிலியும் நற்றாகும் குடும்ப மதிப்புணர்வுக்கு கட்டுப்பட்டவர். தோழி ஒருத்தியே எந்த உணர்வுக்கும் சிறைப்படாமல் அறிவு நிலையிலேயே தானும் இயங்கித் தன்னைச் சார்ந்தவரையும் இயக்குகிறது. களவு வாழ்க்கையில் தலைவியையும், தலைவனையும் தனக்காக குறியிடம் அமைத்து அதில் இன்புறச் செய்கிறாள். அவ்வாறு அமைக்கும் குறியிடத்தில் தோழியின் செயல்பாடுகள் மற்றும் நெறிமுறைகள் வெளிப்படும் திறம் இக்கட்டுரையில் காணப்படுகிறது.*

## முன்னுரை

தலைவன், தலைவியும் காதல் வாழ்க்கையில் பெரும் பங்கெடுத்துப் துணை புரிபவள் தோழி. மேலும் அவர்களுடைய காதல் வாழ்வை கற்பு வாழ்விற்கு இட்டுச் செல்லும் கருவியாக அமைவது குறியிடம் அமைத்தலாகும். அத்தகைய சந்திற்பிற்கான இடத்தை தலைவன், தலைவிக்கு தகுந்தாற்போல ஏற்படுத்தி கொடுக்கும் கருவியாக தோழி திகழ்கிறாள். அக இலக்கியத்தில் இரவுக்குறி, பகற்குறி, அல்லக்குறி மூன்றும் அதிகமாக அகநானூற்றில் அதிகமாக இடம் பெறுகின்றது. அதிலும் தோழியின் செயல்பாடுகள் குறித்த பாடல்கள் அதிகம் சங்ககால மக்களின் வாழ்வியல் நெறிகளின் ஒன்றான காதல் வாழ்வியல் குறியிடம் அமைத்தல் அகநானூற்றில் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தோழி - ஓர் அறிமுகம்

தோழி அக இலக்கிய முக்கோண வடிவத்தின் மேல் முனையாக விளங்குகிறாள். அவள் தலைவன், தலைவி என்ற இரு கரைகளை இணைக்கும் பாலமாகச் செயல்படுகிறாள். களவுலகக் கடலில் தலைவியின் நெஞ்ச மரக்கலம், இடையுறு பாறைகளின் இடையில் தடுமாறும் போது வடதுருவ விண்மீனாக விளங்கி வழிகாட்டுகிறாள்.

தலைவனின் நெஞ்சம் மயக்க இருளிலும், தளர்ச்சி மூடுபனியிலும் சிக்கித் தவிக்கும் போது அறிவுத்தீச்சுடராக அவள் உதவுகிறாள்.

**"தோழிதானே செவிலிமகளே"**

என்று தொல்காப்பியம் செவிலி மகள்தான் தோழி என வரையறுக்கின்றது. மேலும் புலவர் குழந்தை தோழி என்பவள்

"அறிவு சான்ற அக்கால பெண்ணுலகிற்கு எடுத்துக்காகட்டாகத் திகழ்கிறாளன்றோ நம் தோழி" என்று கூறுகிறார்.

தலைவிக்கு தோழிகள் பலர் இருப்பினும் அவர்களை உயிர்தோழியே தோழி எனப்படுவாள்.

### குறிகள் விளக்கம்

குறியின் அடிப்படை அலகு "குறி" என்பதாகும். குறி என்பதற்கு நிகரான ஆங்கிலச் சொல் "Sign" என்ற சொல்லாகும். இச்சொல் "Symbolon" என்ற கிரேக்கச் சொல்லிருந்து தோன்றிது. குறி என்ற சொல் அடையாளம், இலக்கு, நோக்கம் என்னும் பொருண்மைகளைக் கொண்டுள்ளது. பல்வேறு பொருண்மைகள் காணப்படினும் "குறி" என்பவற்றிற்கு தொல்காப்பியர் "அடையாளம்" என்ற பொருளைப் பயன்படுத்தியுள்ளார். இதனையே

**"குறியென படுவது**
**இரவினும் பகலினும் அறியத் தோன்றும்**
**ஆற்றது என்ப"**

என்று கூறுகிறார்.

### பகற்குறி

தலைவியை பகலில் சந்திக்க தலைவனுக்குத் தோழி குறியிடம் காட்டுகிறாள்.

பகற்குறிக்கான இடங்களாக

**"தாழைமா நாழற் றதைத்துயர்ந்த தாம்மொழி**
**வேழைமா னோக்கி யிடம்" (தி.மா.று : 44)**
**................ஞாழலும் தாழையு மார்ந்த**
**புடையெலாம் புன்னை புகன்று"**
**(தி.மா.று : 58)**

என்னும் பாடல்கள் தலைவன், தலைவி சந்திக்கும் பகற்க்குறிக்கான இடமாகும்.

### இரவுக்குறி

தலைவன், தலைவி இருவரும் யாரும் அறியாதவாறு இரவில் சந்திப்பது ஆகும். தலைவன் நிலவொளியில் கடற்கரை கால்வாய் வழியாக மீன் நாற்றம் வீசும் முற்றத்தில் வந்து நிற்கிறார். தலைவன், தலைவி குறித்தப்படி வந்துள்ளது தெரிகிறது எனத் தோழி தலைவன் வருகையைப் குறிப்பால் உணர்த்துவது இரவுக்குறி எனப்படுகிறது. இதனை

**"நிலவுக் கொடுங்கழி நீந்தி நம் மூன்றில்**
**புலவுத் திரைபொருத போழ்து" (கைந் : 9)**

என்ற பாடலில் தலைவன், தலைவி யாரும் அறியாதவாறு இரவு நேரத்தில் தனியொரு இடத்தில் சந்திப்பது ஆபத்தையும் பொருட்படுத்தாத சந்திப்பாகத் தெரிகிறது. துலைவி தோழியின் உதவியால் தலைவனை இரவு நேரத்தில் சந்திப்பது அச்சத்தைக் கடந்த சந்திப்பதாக தெரிகிறது.

வேட்டை நாய் பின் தொடர நீ பகலில் வந்தால் ஊர் முணு முணுக்கும் அதற்காக அஞ்சுகிறோம். தன் பெண்யானை, கன்றுகள் ஆகியவற்றோடு ஆண்யானை வரும் போது புலி தாக்கும். அந்த தாக்குதலில் தப்பிப் பிழைக்கும் யானைக்கூட்டமும் புலியும் நடமாடும். வழியில் நள்ளிருளில் தன்னந்தனியே நீ வருவது பகலில் வருவதைக் காட்டிலும் கொடியது அதற்காகவும் அஞ்சுகிறோம். ஆதலால் விரைவில் திருமணம் செய்வாயாக! ஏன்று தோழி தலைவனிடம் தலைவிகளின் நலன் கருதி பேசுவதாக அமைகிறது.

இவ்வாறு குறியிடம் அமைக்கும் போது தலைவியின் மீது தோழியானவள் கொண்டுள்ளதியாக உள்ளம் புலப்படுகிறது.

### நுண்ணறிவு பெற்றவள்

தலைவன் தலைவி இருவரையும் பல்வேறு சுழ்நிலைகளில் ஆற்றுப்படுத்தி நெறிப்படுத்தும் தோழி மிகுந்த மதிநுட்பத்துடன் செயல்படுகிறாள். தலைவன் தலைவியின் முக குறிப்பையும் கண்டு பொருள் உணரும் திறம் படைத்தவளாகவும், நுண்ணறிவு கொண்டவளாகவும் காணப்படுகிறாள். (தொல்.கள : 1073)

**"குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்**
**இருவரும் உள்வழி அவன்வர உணர்தலென**
**மதியுடம் படுதல் ஒருமூ வகைத்தே"**

என்ற நூற்பா வரிகள் தெளிவுப்படுத்துகிறான். தலைவியையும், தலைவனையும் குறியிடம் சேர்ப்பதில் சிறந்த நுணுக்கத்துடன் செயல்படுகிறாள். இரவுக்குறி, பகற்குறியில் வரும் இடர்களை மதிநுட்பத்தால் அறிந்து அதனை மறுக்கிறாள். மேலும் தகுந்த இடம் பார்த்து இருவரையும் சந்திக்க செய்கிறாள்.

**"காமம் ஒழிவ தாயினும் யாமத்துக்**
**விடகரத்து இயம்பும் நாடஎம்**
**தொடர்பும் தேயுமோ நின்வயினானே"**

**(குறுந் : 42)**

என்னும் பாடல் தலைவனே நீ குறியிடத்தில் கூடி துய்க்கின்ற இன்பம் நீங்கிவிடும். ஆனால் நீ இரவுக்குறியில் வரா விடினும் உனக்கும் தலைவிக்கும் உள்ள நட்பு அழியாது என்று இரவுக்குறியின் இடர்பாட்டை தம் நுண்ணறிவால் தலைவனுக்கு தெளிவுப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

மேலும் தலைவன் தலைவியின் காதலை ஒன்று சேர்க்க தோழி தனக்கே உள்ள நுணுக்கமான செயலில் ஈடுபடுவதாக அகநானூற்று பாடலில் கூறப்படுகிறது.

ஒரு நாள் இரவில் தலைவன் தலைவியை மணந்து கொள்ளாமல் தனியே சந்திக்க வருகிறான். இதனை அறிந்த தோழி தலைவன் வேலிக்கு புறம்பாக நிற்பதை அறிந்து தலைவியின் துன்பத்தினை எடுத்துக் கூறுகிறாள்.

அதவாது தலைவனின் வரும் வழியில் துன்பத்தை கூறி அவனை திருமணம் செய்ய வலியுறுத்தினாள். அச்செயல் வெற்றிப் பெறவில்லை உடனே தோழி தன் மதிநுட்பத்தால் தலைவியின் துன்பத்தை மொழிந்தால் தலைவன் மனம் இரங்குவான். அதனால் திருமணம் நடைபெறும் என்று நினைத்து இவ்வாறு கூறியதாக அகநானூற்றுப் பாடலில்,

**"பனிபொரு மழைக்கண் சிவப்ப, பானாள்**
**முனிபடர் அகல மூழ்குவம் கொல்லோ-**
**பணிபுருள் மேனி ஆய்நலம் தொலைய**
**தணிவுஅருந் துயரம் செய்தோன்**
**அணிகிளர் நெடுவரை ஆடிய நீரே"**

என்ற பாடலின் வழி தோழியின் நுண்ணறிவுத் தன்மையை அறியலாம்.

## முடிவுரை

சங்க அகப்பாடல்களில் தோழி எல்லா வகையிலும் தலைவிக்கும் சமமாகக் கருதப்படுகிறாள். தலைவியினும் சிறப்புடையவளாய் அறிவும், ஆற்றலும் கொண்டு விளங்குகிறாள். தலைவியின் காதல் வாழ்விற்கு உறுதுணையாக செயல்படுகிறாள். தலைவிக்கு ஏற்படுகின்ற அனைத் செயல்பாடுகளிலும் இவள் துணையாக நின்று செயல்படுகிறாள். களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்ற உதவுவது குறிகள் ஆகும். இச்செயல்பாட்டை தோழி நிரல்பட செய்கிறாள். சங்கப்பபடல்களில் தோழி குறிகளின் போது எத்தகைய நெறிமுறைகளை திறம்பட செய்கிறாள் என்பதை இக்கட்டுரையில் ஆராயப்பட்டது.

## அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் - பொருளாதாரம் நூற்ப 1071
2. புவலர் குழந்தை தொல்காப்பிய கலைத் தமிழர் பக் 130
3. தொல்காப்பியம் களவியல் நூற் எ:40
4. பதினெண்க்கீழ்கணக்கு நூல்கள் தி.மா.நு: 44
5. மேலது பா.எ : 58
6. மேலது கைந்நிலை பா.எ : 9
7. மேலது ஐந்திணை ஐம்பது பா. எ. 49
8. சங்க இலக்கியம் அகநானூறு பா.எ. 718
9. தொல்காப்பியம் பொருளதிகாரம் நூற் 1073
10. சங்க இலக்கியம் குறுந்தொகை பா. எ : 42
11. சங்க இலக்கியம் அகநானூறு பா.எ : 278 (11-15)